# ஜாலான் புடுவில் விழுந்த மரம் மக்கிப்போன வேர்களே காரணம்



கோலாலம்பூர், ஜன. 18

ஜாலான் புடுவில் உள்ள விஸ்மா மெக்னம் எதிர்ப் புறம் நேற்று முன்தினம் 35 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ஒரு மரம் விழுந்த தற்கு அதன் வேர்கள் மக்கிப்போனதே காரணம் என்பது தெரிய வருகிறது. நேற்று முன்தினம் காலை 10.40 மணிக்கு அந்த மரம் வேரோடு சாய்ந்திருக்கிறது. இதனால் அந்தச் சாலையின் இரு பகுதிகளும் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன. இரண்டு பெண்கள் பயணம் செய்த ஒரு கார் இந்தச் சம்பவத் தில் சிக்கி இருக்கிறது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் வெளியிட்ட அறிக்கை கூறியது. அவ்விருவரும் சொற்பக் காயங்களுடன் கோலாலம்பூர் மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதுபற்றி சோதனை நடத்திய சமயம் அந்த மரத்தின் வேர்கள் மக்கிப்போனதால் அந்த மரம் விழுந்திருக்க லாம் என்பது தெரிய வருகிறது.

அதேசமயம் ஜாலான் புடுவில் உள்ள மற்ற மரங்கள் மீதும் பாதுகாப்பு கருதி சோதனை கள் நடத்தப்படும். சாலையில் விழுந்த மரத்தை வெட்டி அகற்றும் பணியில் கோலாலம்பூர் மாநகர் மன்றப் பணியாளர் கள் ஈடுபட்டனர். மலேசிய பொதுத் தற்காப்புப் படை வீரர்களும் போலீசாரின் பணிக்கு உதவினர்.